ஊடக அறிவித்தல் இல. – 41

# தேர்தல் ஆணைக்குழு

பாராளுமன்றத் தேர்தல் - 2020.08.05

## உள்ளூர் அதிகாரசபைகளில் அரச ஆதனங்களின் துஷ்பிரயோகத்தைத் தடுத்தல்

**01.** உள்ளூர் அதிகாரசபைத் தலைவர்களின் உத்தியோகபூர்வ வாகனங்கள்:

1.1 உள்ளூர் அதிகாரசபைகளின் தலைவர்களின் கடமை அலுவல்களை நிறைவேற்றும் வசதிக்காக அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள, குறித்தொதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனத்தை "அவர்களின் சொந்தப் பாவனைக்கு எடுத்துக்கொள்வதற்கும் உரிமையுள்ளது" என்ற விடயத்தைப் பயன்படுத்தி உள்ளூர் அதிகாரசபைகளின் தலைவர்கள், தமது உத்தியோகபூர்வ வாகனங்களைப் பயன்படுத்தி அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதாக குறிப்பாக தமது உள்ளூர் அதிகாரசபை அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியிலுள்ள அரசியல் கூட்டங்களில் கலந்து கொள்வதாகவும் பிரசார நடவடிக்கைகளுக்கும் சுவரொட்டிகளையும் துண்டுப் பிரசுரங்களையும் எடுத்துச் செல்வதற்கும் பயன்படுத்துவதாகவும் அறியக் கிடைத்துள்ளது.

1.2 உள்ளூர் அதிகாரசபைகளின் தலைவர்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்களை அரசியல்சார் ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்கு அல்லது அரசியல் பிரசாரக் கூட்டங்களுக்குச் சென்று வருவதற்குப் பயன்படுத்துதல் தடைசெய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் மீண்டும் வலியுறுத்தப்படுகிறது.

1.3 யாதேனும் உள்ளூர் அதிகாரசபையொன்றின் தலைவரொருவர், தனது உத்தியோகபூர்வ வாகனத்தைப் பயன்படுத்தி அரசியல் கூட்டங்களில் கலந்துகொள்வதற்கு அல்லது அரசியல்சார நடவடிக்கைகளுக்கு உத்தியோகபூர்வ வாகனத்தைப் பயன்படுத்துவது அரச ஆதனங்களைத் துஷ்பிரயோகம்செய்யும் செயலாகவே கருதப்படுகிறதென்பது மேலும் அறிவிக்கப்படுகிறது.

**02.** உள்ளூர் அதிகாரசபைகள் வசமுள்ள வாகனங்களையும் வேறு சாதனங்களையும் பொருள்களாதியவற்றையும் பணியாள்தொகுதியினரையும் அரசியல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துதல்.

2.1 உள்ளூர் அதிகாரசபைகள் வசமுள்ள குழாம் வாகனங்களை (அல்லது குறித்தொதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்களை) கட்சி/வேட்பாளர் ஊக்குவிப்பிற்கான சுவரொட்டிகளை எடுத்துச் செல்லல், கூட்டங்களை ஒழுங்கு செய்தல், அதற்காக பொருள்களாதியவற்றை போக்குவரத்துச் செய்வதற்காக உபயோகிப்பதாக அறியக் கிடைத்துள்ளதுடன், இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு சந்தர்ப்பங்களில் குறித்த வாகனங்கள்/ உபகரணங்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன. ஆதலால், எந்தவொரு குழாம் அல்லது உத்தியோகபூர்வ வாகனத்தையும் கட்சி/ வேட்பாளர் ஊக்குவிப்பிற்குப் பயன்படுத்துவதைத் தவிர்க்கும் தேவை மீண்டும் வலியுறுத்தப்படுகிறது.

2.2 உள்ளூர் அதிகாரசபைகள் வசமுள்ள கொடிக் கம்பங்கள், மேடைச் சோடணைகள் முதலியன உள்ளிட்ட அரச ஆதனங்கள் எவையும் சட்டவிரோதமான முறையில் அரசியல்சார் ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுதலாகாது. எவ்வாறாயினும், கட்சி/ வேட்பாளர் பேதமின்றி கொடிக் கம்பங்கள், மேடைச் சோடணைகள், விளையாட்டு மைதானங்கள், கூட்ட மண்டபங்கள் முதலியற்றை உரிய கட்டணம் அறவிட்டு அரசியல் கட்சிகளுக்கு/ வேட்பாளர்களுக்கு வாடகை அடிப்படையில் வழங்குவதற்குத் தடையில்லை.

2.3 உள்ளூர் அதிகாரசபைத் தலைவர்களின் உத்தியோகபூர்வ மனைகள், அரசியல் கட்சி/ வேட்பாளர் ஊக்குவிப்புக்கான பொதுக் கூட்டங்களை அல்லது ஊடக கலந்துரையாடல்களை நடாத்துவதற்குப் பயன்படுத்தப்படுதலாகாது. இருப்பினும், பொதுவான நிலைமையின் கீழ் நடைபெறும் தமது கட்சி/ குழு அங்கத்தவர்களினதும் வேட்பாளர்களினதும் சந்திப்புக்கள், அல்லது கட்சி வேட்பாளர்களின் கலந்துரையாடல்கள் அல்லது கட்சி அரசியல்வாதிகளின் கலந்துரையாடல்களை குறித்த உத்தியோகபூர்வ மனைகளில் நடாத்துவதற்குத் தடையில்லை. இருப்பினும், இத்தகைய கலந்துரையாடல்களில் கலந்துகொள்ள வருகைதரும் அல்லது இவ்வாறான கலந்துரையாடல்களிலிருந்து வெளிச்செல்லும் எந்தவோர் அரசியல்வாதியும் அதற்கிடையில் ஊடக கலந்துரையாடல்களில் கலந்துகொள்வதோ அல்லது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தலோ ஆகாது. மேலும், இவ்வாறான உத்தியோகபூர்வ மனைகளை கட்சியொன்றின்/ வேட்பாளரொருவரின் ஊக்குவிப்பிற்கான தேசிய அல்லது மாவட்ட அல்லது பிரதேச அல்லது தேர்தல் அலுவலகங்களாக அல்லது தேருநர்களை வரவழைத்து நடாத்தப்படும் பிரசாரக் கூட்டங்கள் அல்லது கட்சிகளின்/வேட்பாளர்களின் ஊடக கலந்துரையாடல்களுக்காக ஈடுபடுத்திக்கொள்ளல் ஆகாது. மேலும், தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தவறு அல்லது ஊழல் நடத்தை எதனையும் அல்லது சட்டவிரோத செயலெதனையும் அரசாங்க உத்தியோகபூர்வ மனையில் அல்லது உத்தியோகபூர்வ மனை வளவில் புரிதலாகாது.

2.4 உள்ளூர் அதிகாரசபையின் அலுவலர்கள், நிரந்தர ஊழியர்கள் அல்லது நாட் சம்பளம் பெறும் அமய ஊழியர்கள் எவரையும் கட்சி/ வேட்பாளர் ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்திக்கொள்ளல் ஆகாது. கூட்டங்களுக்கான சோடனைகளைச் செய்தல், கூட்டங்களில் கட்டாயப்படுத்தி கலந்துகொள்ளச்செய்தல், கட்சி/ வேட்பாளரின் ஊக்குவிப்புக்கு ரீ-சர்ட-செப்-தொப்பி என்பவற்றை அணிந்த நிலையிலிருத்தல் முதலிய ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்காக மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை பணியாள்தொகுதி அங்கத்தவர்கள் சிலர் விருப்பத்துடனும், இன்னும் சிலர் பலவந்தமாகவும் அந்நிறுவனங்களின் தலைவர்களினாலும் நிருவாக அலுவலர்களினாலும் ஈடுபடுத்திக்கொள்ளப்படுவதாக சில பணியாள்தொகுதி அங்கத்தவர்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இது மிகவும் பாரதூரமான ஒரு குற்றமாகும். இவ்வாறான செயற்பாடுகளை விட்டும் தவிர்ந்திருக்குமாறும், இவ்வாறான முறைகேடுகளுக்கு எவரும் வாய்ப்பளிக்காமல் இருக்குமாறும் அனைத்து உள்ளூர் அதிகாரசபைகளின் தலைவர்களுக்கும், அவற்றின் நிருவாகப் பொறுப்பு அலுவலர்களுக்கும் வலியுறுத்தித் தெரிவிக்கப்படுகிறது.

**03. அரசியல் கட்சிகளின்/வேட்பாளர்களின் கூட்டங்கள், பிரசார சுவரொட்டிகள், பேரணிகள், துண்டுப் பிரசுங்கள் பகிர்ந்தளித்தல முதலியன தொடர்பான சட்டமீறல்களிலிருந்து தவிர்ந்திருக்கும் தேவை.**

3.1 கட்சி/ வேட்பாளர் ஊக்குவிப்புக்கான அறிவித்தல் பலகைகள், பதாகைகள், கொடிப் பதாகைகள் முதலியவற்றை பகிரங்க இடங்களில் வெளிக்காட்டி வைத்திருக்கும் குற்றத்தையும் பேரணிகள் துவிச்சக்கர வண்டி/ மோட்டார் சைக்கிள்/ வாகனப் பேரணிகளை நடாத்தும் தவறையும் இழைப்பதை விட்டும் தவிர்ந்திருக்குமாறும், தமது உதவுநர்கள் அத்தகைய தவறுகள் இழைப்பதை விட்டும் தடுத்துக்கொள்ளுமாறும் அனைத்து உள்ளூர் அதிகாரசபைகளின் தலைவர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

3.2 அதேபோல், உபசரணைகளைப் புரியும் தவறு, முறைகேடான செல்வாக்கைப் புரியும் தவறு முதலிய சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட தவறு/சட்டவிரோத செயல் எதனையும் இழைக்காதிருக்கும் தேவை குறித்தும், தமது உதவுநர்களையும் அத்தகைய சட்டவிரோத செயற்பாடுகளிலிருந்து தடுத்துக்கொள்ளும் தேவை குறித்தும் அனைத்து உள்ளூர் அதிகாரசபைகளின் தலைவர்களுக்கு வலியுறுத்தப்படுகிறது.

**04.** மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று அவை நிருபணமாகுமெனில், அத்தகைய செயற்பாடுகள் தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்புகளை மீறுவதாகக் கருதி குறித்த உள்ளூர் அதிகாரசபைகளின தலைவர்களுக்கும், அவற்றின் நிருவாகப் பொறுப்பு அலுவலர்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு செயலாற்றும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**05.** இவ்வாறான முறைகேடுகள் தொடர்பான முறைப்பாடுகளை முன்வைக்குமாறு அனைத்துப் பிரசைகளுக்கும், சிவில் ஒழுங்கமைப்புகளுக்கும், ஊடக நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இவ்வாறான சட்டவிரோதமான செயற்பாடுகள் தொடர்பாக கடுமையாகவும் துரிதமாகவும் செயலாறறுமாறு பொலிஸ் அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

**06.** இது சம்டந்தமாக உள்ளூர் அதிகாரசபைகளின் தலைவர்களின் உரிய கவனத்தைச் செலுத்துவதற்கு மாநகர ஆணையாளர்கள்/மாநகர செயலாளர்கள் மற்றும் நகர சடைகள்/பிரதேச சபைகளின் செயலாளர்கள செயலாற்றுதல் வேண்டும்.

**07.** அனைத்துப் பிரசைகளும், அரசாங்க அலுவலர்களும், அரசியல்வாதிகளும குறித்த சட்டங்கள் மற்றும வழிகாட்டுநெறிகளுக்கும் ஒழுக்காற்றுநெறிகளுக்கும் அமைய செயலாற்றுவார்களாயின் மாத்திரமே சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களை நடாத்துவது சாத்தியபபடும்.

**08.** மேலும், தேர்தல் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டுள்ள 2178/29 ஆம் இலக்க 2020.06.06 ஆந் திகதிய, 2178/24 ஆம் இலக்க 2020.06.03 ஆந் திகதிய, 2178/25 ஆம் இலகக 2020.06.03 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களின் மீதும் கவனம் கோரப்படுகிறது.

மஹிந்த தேசப்பிரிய
தவிசாளர். தேர்தல் ஆணைககுழு
தேர்தல் ஆணைக்குழு சார்பாக

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய.

2020.07.08